சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **97 / 2017**

பெயர்: தனலட்சுமி பி.வா.சா. 1 தேதி **18.03.2026**

மூன்றாவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. வழக்கு விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சங்கதிகள் தெரியும். 1,3 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சங்கதிகள் தெரியாது. நான் பி.காம் வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ், ஆங்கிலம் நன்றாக தெரியுமா என்றால் தமிழ் நன்றாக தெரியும். ஆங்கிலம் சுமாராக தெரியும். இவ்வழக்கை தாக்கல் செய்த மணிகண்டன் தற்பொழுது உயிருடன் இல்லை என்றால் சரிதான். மேற்படி டிரஸ்டின் செயலாளராக சுந்தரராஜன் என்பவர் வழக்கை நடத்தி வருகிறார் என்கின்ற சங்கதி தெரியுமா என்றால் தெரியும். மேற்படி சுந்தரராஜனை வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கு டிரஸ்டில் இருந்து வழக்கு நடத்துவதற்கு அதிகாரம் கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வாதியின் டிரஸ்ட் - ஆனது செயல்பாட்டில் இல்லை என்று சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. 1959ம் ஆண்டு எங்களது டிரஸ்ட் ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி டிரஸ்டை எந்த ஆண்டு பதிவு செய்யப்பட்டது என்றால் 1959ம் ஆண்டே பதிவு செய்யப்பட்டது. மேற்டி டிரஸ்ட் ஆரம்பிக்கப்பட்ட போது முதல் பிரதிவாதி ராஜகோபால் நிர்வாக டிரஸ்டியாகவும், ஓரியண்டல் சமஸ்கிருத பள்ளியின் தாளாளர் கூட்டு டிரஸ்டியாக செயல்படவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முதல் பிரதிவாதியின் டிரஸ்ட்-டை பொறுத்து நாளது தேதி வரை எவ்வித திருத்தல் பத்திரமும் இல்லை. மேற்படி 1959ம் ஆண்டு டிரஸ்ட் பத்திரத்தில் சமஸ்கிருத பள்ளி என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர வேறு பள்ளி என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு வேறு பள்ளி என்று குறிப்பிடப்படவில்லை.

2. இந்த வழக்கில் குரு வித்யா பீடம் டிஸ்டிற்கு சம்மந்தப்பட் சமஸ்கிருத பள்ளி தவிர வேறு பள்ளி அல்லது ஸ்தாபனங்கள் சம்மந்தப்பட்டுள்ளது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் முதல் பிரதிவாதி, வாதியுடன் ஏற்படுத்திக்கொண்ட குத்தகை பத்திரம் சட்டப்படி செல்லாது என்று தான்

குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி முதல் பிரதிவாதியின் மருமகள் என்றால் சரிதான். என்னை ஓரியண்டல் சமஸ்கிருத பள்ளியின் தாளாளராக நியமணம் செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் எதனையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதியால் வாதிக்கு பிறப்பித்துக்கொடுத்த இரண்டு குத்தகை பத்திரங்களை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். இவ்வழக்கிற்கு சம்மந்தப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் 114 ஏக்கர் 90 செண்ட். மேற்படி குத்தகை பத்திரங்களில் மேற்படி சொத்தை தான் 98 ஆண்டுகளுக்கு வருட குத்தகையாக ரூ.5000/- என குத்தகை விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி குத்தகை பத்திரங்களை ஆட்சேபணை செய்து தான் நான் குளித்தலை மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.249/2006 என வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி அ.வ.249/2006 என்கின்ற வழக்கானது முழுவிசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

3. அதனை எதிர்த்து இந்நீதிமன்றத்தில் மே.மு. 13/2018 என மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அ.வ.249/2006 வழக்கில் 25.04.2011ம் ஆண்டு ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்யகோரி மணிகண்டன் என்பவர் மனுக்கள் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி மணிகண்டன் தாக்கல் செய்த மனுவின் பேரில் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணை ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். அ.வ.249/2006 வழக்கு செய்ததற்கு பின்னிட்டு முதல் பிரதிவாதி ஒரு சுரேஷ்குமார் என்பவருக்கு மேற்படி வழக்கு சொத்தை பொறுத்து ஒரு குத்தகை பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்திலும் ரூ.5000/- என வருட குத்தகை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. மேற்படி குத்தகை பத்திரத்தை ஆட்சேபணை செய்து மேற்படி நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் சுரேஷ்குமார் என்பவர் வழக்கு சொத்திற்கு வரவில்லை என்பதால் நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. மேற்படி முதல் பிரதிவாதியால் சுரேஷ்குமாருக்கு எழுதிக்கொடுத்தாக குத்தகை பத்திரத்தை ரத்து செய்வதற்கு நான் நடவடிக்கை எதுவும் மேற்கொண்டேனா என்றால் இல்லை. மேற்படி சுரேஷ்குமாருக்கு எழுதிக்கொடுத்தாக கூறக்கூடிய குத்தகை பத்திரத்தின் அசல் என்வசம் உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மேற்படி சுரேஷ்குமாருக்கு எழுதிக்கொடுத்தாக கூறக்கூடிய குத்தகை பத்திரத்தின் அசலை நான் பெற்றுக்கொண்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை.

4. நான் அவ்வாறு கூறியுள்ளேன் என்றாலும், வழக்கிற்காக அவ்வாறு கூறவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி குத்தகை பத்திரத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. மேற்படி அ.வ.249/2006 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்வதற்கு மணிகண்டன் மனு தாக்க்ல செய்து நிலுவையில் இருந்த காலகட்டத்தில் தான் மூன்றாவது பிரதிவாதிக்கு, நானும், முதல் பிரதிவாதியும் சேர்ந்து குத்தகை பத்திரம் எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி மனுவில் நீதிமன்றம் செலவுதொகையை செலுத்த உத்தரவிட்டு, மேற்படி செலவு தொகையை எனது வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்கு பின்னிட்டு தான் குத்தகை பத்திரம் (வா.சா.ஆ.18) மூன்றாவது பிரதிவாதிக்கு பிறப்பித்துக்கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். இவ்வழக்கில் முதல் பிரதிவாதியானவர் வாதிக்கு குத்தகை பத்திரம் எழுதிக்கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ளேனா என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.18 ஆவணத்தில் வழக்கு சொத்து தரிசாக உள்ளதாகவும், அதில் இருந்து எந்த வருமானமும் கிடைக்கபெறவில்லை என்பதாலும், டிரஸ்டை நடத்த போதுமான பொருளாதார வசதி இல்லை என்பதாலும், மேற்படி வா.சா-ஆ.18 எழுதப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.18க்கு முன்னர் மேற்படி மூன்றாவது பிரதிவாதியுடன் வா.சா-ஆ.16, வா.சா.ஆ.17 எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா-ஆ.16,17 ஆவணங்களும் மேற்படி அ.வ. 249/2006 வழக்கு நிலுவையில் இருந்த காலகட்டத்தில் ஏற்படுத்தவை தான் என்றால் சரிதான்.

5. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா-ஆ.18 ஆவணத்தில் மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பபட்ட தேதி 23.07.2017 எனவும், சொத்தின் சுவாதீனம் ஒப்படைப்பது 01.04.2017 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 01.04.2017ம் தேதி மூன்றாவது பிரதிவாதியிடம் சொத்தின் சுவாதீனம் ஒப்படைப்பதற்கு தனிப்பட்ட ஆவணம் உண்டா என்றால் ஆவணங்கள் உள்ளது. ஆனால் அதனை வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறே வா.சா.ஆ.6 ,7 ஆவணங்களிலும் ஆவணத்தில் ஒரு தேதி குறிப்பிட்டும், சொத்தின் சுவாதீனம் வேறு ஒரு தேதி குறிப்பிட்டும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா-ஆ.6,7, 16,17 மற்றும் 18 ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்கள், மேற்படி அ.வ.249/2006 வழக்கில் கண்ட சொத்துக்கள் மற்றும் மேற்படி ஒரு சுரேஷ்குமார் என்பவருக்கு முதல் பிரதிவாதி எழுதிக்கொடுத்ததாக கூறக்கூடிய வா.சா.ஆ.15 ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் ஒரே சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்துக்கள் எந்த பதிவாளர் அலுவலகத்திற்கு எல்லைக்குள் உள்ளது என்று தெரியுமா என்றால் நங்கவரம் தெற்கு -1 சார் பதிவாளர்

அலுவலக எல்லைக்கு உட்பட்டது. அ.வ.249/2006 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் சொத்து விவரத்தில் அவ்வாறு நங்கவரம் தெற்கு -1 என குறிப்பிட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை.

6. வாதியால் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கின் ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண். 957A/1A 2A ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.13,14 வில்லங்க சான்றிதழ்கள், சர்வே எண். 957A/1A 2A சொத்திற்கு சம்மந்தப்பட்டவை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.13,14 ஆவணத்தில் தெற்கு -1 மற்றும் தெற்கு -2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்துக்களான 114 ஏக்கர் 90 செண்ட் பூமி ஒரே தாக்காகதான் உள்ளது. மேறப்டி சொத்திற்குரிய நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு சொத்தை ஒட்டியை முதல் பிரதிவாதியின் டிரஸ்டிற்கு சம்மந்தமான சொத்துக்கள் உள்ளது. அதன் அளவு வழக்கு சொத்தையும் சேர்த்து சுமார் 180 ஏக்கர் இருக்கும். மேற்படி வழக்கு சொத்தை கடைசியாக எப்பொழுது பார்த்தேன் என்றால் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் பார்த்தேன். அதன் பிறகு நான் வழக்கு சொத்தை பார்க்கவில்லை. மேற்படிவழக்கு சொத்திற்கு அருகில் மூன்றாவது பிரதிவாதிக்கு தனிப்பட்ட சொத்து எதுவும் உண்டா என்றால் உள்ளது. அது எந்த திசையில் உள்ளது என்று தெரியாது. வழக்குசொத்தை பொறுத்து வாதி, சுரேஷ்குமார் மற்றும் மூன்றாவது பிரதிவாதியை தவிர வேறு யாருக்காவது மேற்படி சொத்தை குத்தகைக்கு கொடுத்திருந்தோமா என்றால் ஒரு ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகள் டிரஸ்டிற்கு குத்தகைக்கு கொடுத்திருந்தோம். மேற்படி பத்திரம் பதிவு செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. மேற்படியாரிகளின் அனுபவத்தில் மேற்படி சொத்து இல்லை. மேற்படி வாதி, சுரேஷ்குமார் மற்றும் மூன்றாவது பிரதிவாதியை மற்றும் ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகள் டிரஸ்டிற்கு குத்தகைக்கு கொடுத்ததை தவிர வேறு யாருக்கும் குத்தகை கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் வில்லங்க சான்றிதழை நான் பார்த்துள்ளேன். அதில் மேலே சொன்ன நான்கு நபர்களை தவிர வேறு யார் பெயரும் உள்ளதா என்றால் இல்லை.

7. என்னிடம் காண்பிக்கப்படும் 30.12.2014ம் தேதியிட்ட குத்தகை பத்திரமானது ஒரு ஜெயபிரகாஷ் என்பவருக்காக இவ்வழக்கின் முதல் பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்பட்ட குத்தகை பத்திரம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வா.சா-ஆ.41 (இரண்டாவது பிரதிவாதி தரப்பில் மேற்படி வா.சா-ஆ.41 ஆவணத்தில் பி.வா.சா.1 தரப்பினராக இல்லை என்பதாலும், மேற்படி வா.சா.ஆ.41 ஆவணத்தில் பி.வா.சா.1 கையொப்பம் எதுவும் செய்யப்படவில்லை என்பதாலும் மேற்படி ஆவணத்தை குறியீடு

செய்ய முடியாது என ஆட்சேபணை தெரிவிக்க, வாதி தரப்பில் வழக்கு சொத்திற்கான ஆவணம் என்பதால் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்வதற்கு ஆட்சேபணை தெரிவிக்க இயலாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.41 ஆவணமானது வழக்கு சொத்திற்குரியவை என்பதால் மேற்படி ஆவணத்தை இந்நீதிமன்றத்தால் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தின் நம்பகதன்மை மற்றும் சான்றிதழ் மதிப்பு குறித்து தீர்ப்பின்பொழுது முடிவு செய்து கொள்ளலாம் என்பதன் அடிப்படையில் மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது). என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா-ஆ.41 ஆவணத்தில் உள்ள இளங்கோவன் என்கின்ற நபர் வாதி, சுரேஷ்குமார், மூன்றாவது பிரதிவாதி ஆகியவர்களின் பெயரில் ஏற்பட்ட குத்தகை பத்திரங்கள் கையெழுத்து செய்தவர் என்றால் சரிதான். மேற்படி இளங்கோவன் எங்களது நிறுவனத்தில் பணிபுரிபவர் தான். மேற்படி இளங்கோவன் டிரஸ்ட் சம்மந்தமாக செய்யும் வேலைகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. 2005ம் ஆண்டு குத்தகை பத்திரம் ஏற்பட்டதற்கு பின்னர் மணிகண்டன் என்பவர் தன்னை குத்தகைதாரராக பதிவு செய்யவேண்டும் என்று வருவாய் துறையில் மனு கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

8. அ.வ.249/2006 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு மேற்படி மணிகண்டனும், பின்னர் இவ்வழக்கின் வாதியும், அவர்களை குத்தகைதாரர்களாக பதிவு செய்யவேண்டும் என்று வருவாய் துறையில் மனு கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறே மூன்றாவது பிரதிவாதியும் அவரை குத்தகைதாரராக பதிவு செய்யவேண்டும் என்று வருவாய் துறையில் மனு கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி மூன்றாவது பிரதிவாதியை குத்தகைதாரராக பதிவு செய்து குளித்தலை வட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான். மேற்படி உத்தரவினை எதிர்த்து மதுரை உயர் நீதிமன்றத்தில் நீதிபேராணை தாக்கல் செய்தவிவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி மதுரை உயர் நீதிமன்றத்தில் நீதிபேராணை தாக்கல் செய்யப்பட்டதாகவும், அது W.A (MD) No.387 & 390 /2023என கோப்பிற்கு எடுக்கப்பட்டு மேற்படி உத்தரவில் 3வது பாராவில் 7வது வரியில் மேற்படி மேல்முறையீட்டாளருக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என வா.சா-ஆ.22 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி மூன்றாவது பிரதிவாதியானவர் வழக்கு சொத்தில் அனுபவத்தில் இல்லாததால் வட்டாட்சியரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்பட்டுவிட்டது என்று தெரியுமா என்றால் மூன்றாவது பிரதிவாதி தான் அனுபவத்தில் உள்ளார். சட்டப்படியும், நீதிமன்ற உத்தரவுகளின் அடிப்படையிலும் வாதியின் டிரஸ்ட் தான் தாவா சொத்தினை அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல.

9. வழக்கு சொத்தில் எத்தனை கிணறு, எத்தனை போர்வெல் உள்ளது என்றால் கிணறு இல்லை. 3,4 போர்வெல்கள் உள்ளது. மேற்படி வழக்கு சொத்தின் விவரம் எனக்கு தெரியாது என்பதால் தான் தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி மூன்றாவது பிரதிவாதி வழக்கு சொத்தினை சுவாதீனம் அடைய எடுத்த முயற்சிகளின் அடிப்படையில் அவருக்கும், வாதிக்கும் இடையே பல்வேறு குற்றவழக்குகள் நடைபெற்று வருகின்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். மூன்றாவது பிரதிவாதியிடம் தான் சொத்தின் சுவாதீனம் உள்ளது. மேற்படி மூன்றாவது பிரதிவாதி வங்கி கணக்கு மூலமாக குத்தகை பணம் செலுத்தியதாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. தேவைபட்டால் கொடுக்க தயாராக உள்ளோம். வழக்கு சொத்தில் நாளதுதேதிவரையில் என்ன அமைப்புகள் உள்ளது என்கின்ற சங்கதி எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல, தெரியும். மேற்படி மூன்றாவது பிரதிவாதி சொத்தை எப்படியாவது அபகரிக்கவேண்டும் என்கின்ற நோக்கத்தில் செயல்பட்டு வருகிறார் என்றாலும், அதற்கு நானும், முதல் பிரதிவாதியும் உறுதுணையாக உள்ளோம் என்றால் சரியல்ல. மூன்றாவது பிரதிவாதி தூண்டிவிட்டு தான் நான் இவ்வழக்கையும், அ.வ.249/2006 என்கின்ற வழக்கையும் நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சொத்தின் அனுபவம் வாதியின் வசம் தான் உள்ளது என்றாலும், மூன்றாவது பிரதிவாதி வசம் இல்லை என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.18 17:40:22 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.